திருப்பெரும்புதூர் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : செல்வி.ரா.நந்தினி.,B.Sc.,(Hons.)Agri.,

ந.க.எண்.2304/2025/எப்1 **நாள்.01.07.2026**

பொருள்:- மனைப்பிரிவு – திருப்பெரும்புதூர் நகராட்சி – திருப்பெரும்புதூர் 'இ' கிராமம் சர்வே எண்.1336/1,2,3A,3B-ல் 17158.67.00 ச.மீ பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடுதல் – தொடர்பாக.

பார்வை:-

1) துணை இயக்குநர் (பொ), நகர் ஊரமைப்பு துறை அவர்களின் கடித ந.க.எண்.AVXYPJXI/2024/TCP5 நாள்.07.03.2025
2) திருப்பெரும்புதூர் சார்பதிவாளர் அவர்கள் அலுவலகத்தில் மனுதாரர் தானமாக சாலை இடத்தினை பதிவு செய்த தான பத்திரம் எண்.1591/2025, நாள்.13.02.2025.
3) நகர்மன்ற தீர்மானம் எண்.107/2026 நாள்.01.07.2026.

****

உத்தரவு :-

திருப்பெரும்புதூர் நகராட்சிக்குட்பட்ட **திருப்பெரும்புதூர்** 'இ' கிராமம் சர்வே எண். 1336/1,2,3A,3B-ல் 17158.67.00 ச.மீ நிலப்பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வேண்டி திரு.J.M.Chandra Sekar POA Holder, Lancor Holdings Limited,என்பவர்களால் நகர் ஊரமைப்பு துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்படி மனுதாரின் விண்ணப்பம் துணை இயக்குநர்(பொ), நகர் ஊரமைப்பு துறை காஞ்சிபுரம் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 1-ல் காணும் கடிதத்தின் படி அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சாலை அமைப்பு வரைபடத்தின் படி, சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை திருப்பெரும்புதூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பார்வை 2-ல் கண்டுள்ளபடி திருவாளர்கள்.Lancor Holdings Limited, என்பவர்கள் பத்திர பதிவு செய்து திருப்பெரும்புதூர் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்துள்ளார். தான பத்திர எண்.1591/2025 நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் உத்திரவில் மனைப்பிரிவிற்கு ந.க.எண்.AVXYPJXI/2024/TCP5 நாள்.07.03.2025 திட்ட அனுமதி எண்.19/2025 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 3-ல் காணும் நகரமன்ற தீர்மானத்தின் படி மேற்கண்ட குடியிருப்பு மனைகளுக்கு மன்றம் அனுமதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இம்மனைப்பிரிவிற்கு இந்நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

வ.எண்	கட்டண விவரம்	தொகை ரூ	ரசீது எண்/நாள்
1	மனைப்பிரிவு கட்டணம்	ரூ.1,06,000/-	
2	ஆய்வு கட்டணம்	ரூ. 50,000/-	

3	குடியிருப்பு மனை கட்டணம்	ரூ.31,800/-	இரசீது எண். 199/001/01/26-27/0001113 நாள். 22.05.2026
4	கூர்ந்தாய்வு கட்டணம்	ரூ. 1,06,000/-	
5	அபிவிருத்தி கட்டணம்	ரூ.6,86,360/-	
6	மனைப்பிரிவின் பராமரிப்பு வைப்புத்தொகை கட்டணம்	ரூ.7,24,712/-	
7	கொடி நாள்	ரூ.50,000/-	
	மொத்தம்	**17,54,872/-**	
8	நிலப்பயன்பாட்டு கட்டணம்	ரூ.25,44,000/-	IFHRMS Challan No: 20260514033480 Dated: 14.05.2026
9	காலியிட வரி	ரூ.8,53,293/-	இரசீது எண். 199/CP/26-27/0000003 நாள். 01.04.2026

நிபந்தனைகள்

1 நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநர் திட்ட அனுமதி எண்.19/2025, நாள்.07.03.2025-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாது கடைபிடித்தல் வேண்டும்.

2 இந்நகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்ட இடங்களில் எக்காரணத்தை கொண்டும் ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

3 இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நகர் ஊரமைப்பு துறை துணை இயக்குநரால் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள விவரப்படி மனைகள் பிரித்து மாற்றம் செய்யாமல் விற்பனை செய்தல் வேண்டும் மற்றும் மனைப்பிரிவு வரைபடத்தில் தெரிவித்துள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும்.

4 மனைப்பிரிவு தொடர்பான இடத்தில் (புலஎண்ணில்) உரிமை பிரச்சினை வருமேயானால் தாங்களே சிவில் / குற்றவியல் நீதிமன்றத்தில் தீர்வு பெற்றுக்கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலையிலும் நகராட்சி, நகர் ஊரமைப்பு துறை பொறுப்பேற்காது.

5 தவறான ஆவணம் சமர்ப்பித்து அனுமதி பெறப்பட்டது பின்னர் தெரியவந்தால் எந்த நேரத்திலும் வழங்கப்பட்ட உத்திரவு இரத்து செய்யப்படும்

6 நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி-2, நாள்.20.10.2022-ன்படி மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்தபின் இவற்றில் எது அதிகாலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர்/ மனைப்பிரிவு உரிமையாளரைச் சாரும்.

எனவே, மேற்கண்ட இடத்தில் திருவாளர்கள்.Lancor Holdings Limited என்பவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க மேற்காணும் நிபந்தனைக்குட்பட்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையாளர்

திருப்பெரும்புதூர் நகராட்சி

பெறுநர்:-

திரு.J.M.Chandra Sekar POA Holder,
Lancor Holdings Limited,
VTN Square, New No:58 Old No:104, G N Chetty Road,
Thiyagaraya Nagar, Chennai – 600 017.

நகல் பணிந்தனுப்படுகிறது:-

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், காஞ்சிபுரம் மாவட்டம்